**சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.**
**முன்னிலை – திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.பி.எல்.,**
**சார்பு நீதிபதி, கொடுமுடி.**
**2025 ம் வருடம் ஜனவரி மாதம் 3 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**2055 திருவள்ளுவராண்டு ஸ்ரீ குரோதி வருடம் மார்கழி மாதம் 19 ம் நாள்**

இடைநிலை மனு எண்.8/2023
அசல் வழக்கு எண்.113/2024

பரம்பரை அறங்காவலர்கள்
அருள்மிகு சொக்கநாச்சியம்மன்
திருக்கோவில்
நஞ்சைகிளாம்பாடி கிராமம்,
ஈரோடு மாவட்டம் அதற்காக கே.பி. நவநீதன் .. மனுதாரர்/1 பிரதிவாதி

// எதிர் //

1. வி.எம். சின்னப்பன்
2. வி.சி. சிவகுமார்
3. வி.சி. தியாகராஜன் .. எதிர்மனுதாரர்/வாதி

08.09.2023 தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 7, விதி 11(a), (d) மற்றும் பிரிவு 151ன்படி மனுதாரர்/1 பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக் கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 12.12.2025 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மனுதாரர் தரப்பில் திரு.T.செந்தில்குமார், வழக்கறிஞர் அவர்களும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.V.S. துரைசாமி வழக்கறிஞர் அவர்களும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்–

**<u>உத்தரவு</u>**

வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக் கோரி மனுதாரர்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனு உரையின் சுருக்கம் பின்வருமாறு:</u>

மனுதாரர் தரப்பில் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்களால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தானது நஞ்சை கிளாம்பாடி கிராம, சொக்கநாச்சியம்மன் கோயிலுக்கு பாத்தியப்பட்ட இனாம்நிலம் என்றும் மைனர் இனாம் ஒழிக்கப்பட்டு எஸ்.ஆர்.நெ.4/1967 ன்படி விசாரணை நடத்தப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ள விவரம் எதிர்மனுதாரர் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. வழக்குரையிலேயே 1ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் மாணிக்க சுந்தரம் கோபிச்செட்டிபாளையம் செட்டில்மெண்ட் தாசில்தார் முன்பாக விசாரணைக்கு ஆஜராகி அதில் 23.06.1967 தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 1ம் மனுதாரர் கோவில் பெயரில் பட்டா வழங்கப்பட்டது. அதன்பேரில் யாதொரு மேல்முறையீடும் செய்யாமல் மேற்படி உத்தரவை ஏற்றுக் கொண்டதாகவும், கடந்த 2012ம் வருடம் எதிர்மனுதாரர்களாகல் தாக்கல் செய்யப்பட்ட சி்எம்.ஏ.2/2012 தள்ளுபடி செய்யப்பட்டது. அதேபோல் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த அ.வ.எண். 145/2006 வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், செட்டில்மெண்ட் தாசில்தார் மைனர் இனாம் ஒழிப்பு சட்டத்தின்படி 23.06.1967 தேதியில் பிறப்பித்த உத்தரவு எதிர்மனுதாரருக்கு தெரியும். மனுதாரர் கோவிலுக்கு பட்டா வழங்கப்பட்ட 55 வருடங்களுக்கு மேலாகி உள்ளதாகவும், எதிர்மனுதாரரின் முன்னோரகள் தாக்கல் செய்த சி.எம்.ஏ.2/2012 அ.வ.எ்ண். 145/2006 ஆகியவை தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால் இந்த வழக்கானது பிரிவு 11 உடன் இணைந்த கட்டளை 2 விதி 2 உரிமையியல் விசாரணை முறைச்சட்டத்தின்படி நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்கள் தாவா

சொத்தின் உரிமையை விளம்புகை செய்யக்கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். அவர்களுக்கு தாவா சொத்தின்பேரில் உரிமை மூலம் இல்லை என்றும் கோபிச்சசெட்டிபாளைய்ம செட்டியல்மெண்ட் தாசில்தார் பிறப்பித்த எஸ்.ஆர்.நெ.4/1967 உத்தரவின்படி கடந்த 23.06.1967 தேதியில் பட்டாவானது 1ம் மனுதாரர் கோவில் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பட்டா வழங்கப்பட்ட விவரம் அறிந்த 3 வருட காலத்திற்குள் அசல் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றும் அதனால் இந்த வழக்கு காலவரம்பால் பாதிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே முன் வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் அடுத்த முறை வழக்குக்கு வர முடியாது. இந்நீதிமன்றத்திற்கு வழக்கை விசாரணை அதிகார வரம்பு இல்லை என்றும் வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும் பொய்யான சங்கதியுடன் தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கை நிராகரிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

**3.<u>எதிர் உரையின் சுருக்கம்:</u>**

3.1. இந்த மனு பொய்யானது, சட்டப்படியும் சங்கதிகளின்படியும் நிலைக்கத் தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். மனுச் சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை. தாவா சொத்தானது எதிர்மனுதாரர்களின் குடும்பத்தின், சுவாதீனத்திலும் சுமார் 150 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது. தாவா சொத்தினை எதிர்மனுதார்களின் முன்னோர்கள் அப்போது கோயில் நிர்வாகத்தில் இருந்து மனுதாரரின் முன்னோர்களிடத்தில் கிரையம் மூலம் உரிமையாக பெற்றார். எந்த ஆண்டு கிரையமாக பெற்றார்கள் என்பது சரிவர தெரியவில்லை என்றாலும், மிக உறுதியாக 1916ம் ஆண்டுக்கு முன்னர் சுமார் 50 ஆண்டு காலத்திற்குள் தாவா சொத்து எதிர்மனுதாரர்களின் முன்னோர்களிடம் மாறியுள்ளது. ஏனெனில் 12.07.1916ம் தேதியிட்ட ஆவண எண். 2065/1916 ஆக

எண்ணிடப்பட்டதும், கொடுமுடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதுமான எதிர்மனுதாரர்களின் முன்னோர்களான சுப்பண கவுண்டர், குமாரசாமி கவுண்டர் மகன்கள் மற்றும் அவர்களுடைய இதர சட்டபூர்வ வாரிசுகளுக்கும் இடையில் ஏற்பட்ட பாகப்பிரிவினை மூலம் எதிர்மனுதாரர்களின் முன்னோரான முத்துசாமி கவுண்டருடைய மகன்களான சுப்பண கவுண்டர் மற்றும் சின்னப்ப கவுண்டர் ஆகிய இருவருக்கும் சி. செட்யூல்படி பாத்தியப்பட்டு அவர்களது சுவாதீனத்தில் இருந்துள்ளது.

3.2. பின்னிட்டு 1950ம் ஆண்டு மேற்படி சுப்பண கவுண்டர் மற்றும் அவரது மகன் வி.எஸ். மாணிக்கசுந்தரம் ஆகிய இருவருக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் இதர சொத்துக்களுடன் சேர்ந்து தாவா சொத்தானது வி.எஸ்.மாணிக்கசுந்தரம் அவர்களுக்குப் பாத்தியப்பட்டுள்ளது. இந்த பாகப்பிரிவினை பத்திரமானது ஈரோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1893/1950 எண்ணாக 01.11.1950 தேதியன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. வி.எஸ். மாணிக்க சுந்தரம் தனக்குப் பாகப்பிரிவினையின் மூலம் பாத்தியப்பட்ட தாவா சொத்தை தனக்காகவும் மற்றும் மைனர் மகன்கள் (1) சின்னப்பன் (2) செந்தில்குமார் (3) சுப்பிரமணியன் மற்றும் (4) முத்துக்குமார் ஆகியவர்களுடன் பாகப்பிரிவினை செய்து அதனை ஈரோடு சார் பதிவாளர் அலுவலகத்தில் 15.02.1960ம் தேதியில் ஆவண எண். 444/1960ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் மைனர் சொத்துக்களுக்கு பாதுகாவலராக அவரே இருந்து, அனைத்து சொத்துக்களையும் தன்னுடைய சுவாதீனத்தில் வைத்திருந்தார்.

3.3. பின்னிட்டு 1971ம் ஆண்டு மேற்படி வி.எம். மாணிக்கசுந்தரம் அவர்களது மகனான செந்தில்குமார் தனது தந்தையையும், தனது மற்ற மூன்று சகோதரர்களையும் (1ம் எதிர்மனுதாரர் உட்பட) எதிர்த்து ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் பாகப்பிரிவினைக் குறித்து அசல் வழக்கு எண்.

307/1971 தாக்கல் செய்தார். இறுதியில் அந்த அசல் வழக்கானது அந்த வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிகளின் சமாதான உடன்படிக்கை (இ.ம.எண். 1444/1971) மூலம் தீர்ப்பானது. தீர்ப்பின்படி தாவா சொத்தானது எதிர்மனுதாரர் செந்தில்குமார் மற்றும் அவரது சகோதரர்கள் மூவருக்கும் பாத்தியப்பட்டது என உத்தரவிடப்பட்டுள்ளது.

3.4. மேற்படி அசல் வழக்கு தீர்ப்பின்படி சொத்துக்களை அனுபவித்து வந்து 11.12.1980 அன்று 1ம் எதிர்மனுதாரரும், அவருடைய மற்ற சகோதரர்களும் தங்களுக்குள் ஒரு பாகப்பிரிவினை ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக் கொண்டார்கள். அந்த பாகப்பிரிவினை ஒப்பந்தப்பத்திரத்தின்படி வழக்கிடைச் சொத்தானது, எதிர்மனுதாரருக்கும், அவரது மகன்களான 2வது மற்றும் 3வது எதிர்மனுதாரர்களுக்கும் பாத்தியப்பட்டது.

3.5. 11.12.1980 தேதியன்று ஏற்படுத்திக் கொண்டது பாகப்பிரிவினை ஒப்பந்தம் தானே தவிர அது பதிவு செய்யப்படவில்லை. ஆதலால், தாயாதிகளுக்குள் பிரச்சனை ஏற்பட்டு ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.20/1997 வழக்கு தொடரப்பட்டு அதன் மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண். 562/2003ல் ஏற்பட்ட சமரச உடன்படிக்கையின்படி வழக்கிடை சொத்தானது, செட்யூல் –ஏல் வரிசை எண்.6ல் குறிப்பிட்டப்படி எதிர்மனுதாரர்களுக்கு உரிமையாக்கப்பட்டுள்ளது.

3.6. தாவா சொத்து இனாம் நிலம் என்பதால் மைனர் இனாம் ஒழிப்பு நடவடிக்கைகளின் போது எதிர்மனுதாரர்களுடைய முன்னோரான மாணிக்கசுந்தரம், கோபிசெட்டிபாளையம் செட்டில்மெண்ட் தாசில்தார் முன்னிலையில் ஆஜராகி உள்ளார். ஆனால், இனாம் நிலத்தை வாங்கிய கிரையப் பத்திரம் இல்லாத காரணத்தினால் ரயத்துவாரி பட்டா அவருக்கு வழங்கப்படவில்லை.

3.7. பின்னிட்டு செட்டில்மெண்ட் தாசில்தார் அவர்களின் உத்தரவினை எதிர்த்து, ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு சி.எம்.ஏ.எண்.2/2012 தாக்கல் செய்தார். இந்த மேல்முறையீடு காலம் கடந்தது என்று தள்ளுபடி செய்யப்பட்டது.

3.8. மைனர் இனாம் ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றும் சட்டம் (Minor Inam Abolition (Conversion into Ryotwari Act) 1963) இனாம் நிலங்களை ஒழித்து ரயத்துவாரியாக மாற்றி நிலங்களை உழுபவர்களுக்கு அந்த நிலங்களை உடமையாக்குவதற்காக கொண்டுவரப்பட்ட சட்டம். ஏனெனில் மேற்படி சட்டப்பிரிவு 8(1)ன்படி மேற்படி சட்டம் அமுலுக்கு வந்த தேதிக்கு முன்னர் 60 ஆண்டுகளுக்குள் குறிப்பிட்ட இனாம் நிலம், விற்பனை மூலம் மாற்றப்பட்டிருந்தால், விற்பனை மூலம் அந்த நிலத்தைப் பெற்றவருக்கு பட்டா வழங்கப்பட வேண்டும். மேற்படி சட்டப்பிரிவு 8(2)(1 b)ன்படி (1) சட்டம் அமுலுக்கு வந்த தேதிக்கு முன்னர் 12 ஆண்டுகளுக்குள் விற்பனை மூலம் இனாம் நில உரிமை மாற்றப்பட்டிருந்தால் அந்த நிலத்திற்கான (consideration amount) இழப்பீட்டுத் தொகை 20 ஆண்டு தவணையில் அரசுக்கு செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பட்டா வழங்கப்பட வேண்டும். இந்த இரண்டு நிபந்தனைகளும் இல்லாதிருக்கும்பட்சத்தில்தான், இனாம், நிலம், இனாம்தாரருக்கு பட்டா வழங்கப்பட வேண்டும்.

3.9. தாவா சொத்து 1963 க்கு முன்னால் சுமார் 100 ஆண்டு காலமாக எதிர்மனுதாரர்கள் குடும்பத்தினரின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் உள்ளது. ஆக இந்த நிலத்தினுடைய வீடு அனுபோக உரிமை எதிர்மனுதாரர்களுக்கே உண்டு என்பது வெளிப்படை. தாவா சொத்து எதிர்மனுதாரர்களுடைய சுவாதீனத்திலும், அனுபவத்திலும் உள்ளதை எதிர்மனுதாரர்களுடைய தாயாதிகள் தடுக்கக்கூடாது என்றும், தாவா சொத்தை மூன்று பாகமாக பிரித்துக் கொடுக்க வேண்டும் என்றும், ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் அ.வ.நெ.145/2006 தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி

வழக்கின் வாதுரையில் பத்தி 10ல் தாவா சொத்தானது உரிமை மூலம் எதிர்மனுதாரர்களிடம் உள்ளதென்று தாக்கல் செய்யப்பட்டது. எதிர்மனுதாரர்களுடைய கவனக்குறைவின் காரணமாக இந்த வழக்கு Dismissed for Default ஆனாலும், எதிர்மனுதாரர்களுக்குரிய தாவா சொத்தின் உரிமை மூலம் தொடர்பான கூற்றை மேற்படி வழக்கில் 4 முதல் 14 வரையிலான பிரதிவாதிகள் (மேற்படி திருக்கோவிவல் அறங்காவலர்கள்) மறுக்கவில்லை.

3.10 ஆகவே எதிர்மனுதாரர்களும் அவர்களது முன்னோர்களும் சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாக தாவா சொத்தை அனுபவித்து அதற்குண்டான அரசு வரி மற்றும் அரசு தீர்வை இவற்றை எதிர்மனுதாரர்களே செலுத்தி வந்துள்ளார்கள். ஆகவே தாவா சொத்து தொடர்பான உரிமை மூலம் எதிர்மனுதாரர்களுக்குப் பாத்தியப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரிக்கையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் மேற்படி உண்மை விவரங்களை மறைத்து தாக்கல் செய்துள்ளதால் மனுதாரரின் மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

5.<u>பிரச்சினைக்குத் தீர்வு:</u>

மனுதாரர் தரப்பில் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்களால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், தாவா சொத்தானது நஞ்சை கிளாம்பாடி கிராம, சொக்கநாச்சியம்மன் கோயிலுக்கு பாத்திய்பப்டட இனாம்நிலம் என்றும் மைனர் இனாம் ஒழிக்கப்பட்டுஎஸ்.ஆர்.நெ.4/1967ன்படி விசாரணை நடத்தப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ள விவரம் எதிர்மனுதாரர் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதாகவும், வழக்குரையிலேயே 1ம் எதிர்மனுதாரரின்

தகப்பனார் மாணிக்க சுந்தரம் கோபிச்செட்டிபாளையம் செட்டில்மெண்ட் தாசில்தார் முன்பாக விசாரணைக்கு ஆஜராகி அதில் 23.06.1967 தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 1ம் மனுதாரர் கோவில் பெயரில் பட்டா வழங்கப்பட்டதாகவும், அதன்பேரில் யாதொரு மேல்முறையீடும் செய்யாமல் மேற்படி உத்தரவை ஏற்றுக் கொண்டதாகவும், கடந்த 2012ம் வருடம் எதிர்மனுதாரர்களாகல் தாக்கல் செய்யப்பட்ட சி.எம்.ஏ.2/2012 தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், அதேபோல் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த அ.வ.எண். 145/2006 வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், செட்டில்மெண்ட் தாசில்தார் மைனர் இனாம் ஒழிப்பு சட்டத்தின்படி 23.06.1967 தேதியில் பிறப்பித்த உத்தரவு எதிர்மனுதாரருக்கு தெரியும் என்றும் மனுதாரர் கோவிலுக்கு பட்டா வழங்கப்பட்டு 55 வருடங்களுக்கு மேலாகி உள்ளதாகவும், எதிர்மனுதாரரின் முன்னோரகள் தாக்கல் செய்த சி.எம்.ஏ.2/2012 அ.வ.எண். 145/2006 ஆகியவை தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால் இந்த வழக்கானது பிரிவு 11 உடன் இணைந்த கட்டளை 2 விதி 2 உரிமையியல் விசாரணை முறைச்சட்டத்தின்படி நிலைக்கத்தக்கதல்ல.

6. எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தின் உரிமையை விளம்புகை செய்யக்கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், அவர்களுக்கு தாவா சொத்தின்பேரில் உரிமை மூலம் இல்லை என்றும் கோபிச்சசெட்டிபாளைய்ம செட்டியல்மெண்ட் தாசில்தார் பிறப்பித்த எஸ்.ஆர்.நெ.4/1967 உத்தரவின்படி கடந்த 23.06.1967 தேதியில் பட்டாவானது 1ம் மனுதாரர் கோவில் பெயரில் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி பட்டா வழங்கப்பட்ட விவரம் அறிந்த 3 வருட காலத்திற்குள் அசல் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றும் அதனால் இந்த வழக்கு காலவரம்பால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே முன் வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் அடுத்த முறை வழக்குக்கு வர முடியாது என்றும் இந்நீதிமன்றத்திற்கு வழக்கை விசாரணை அதிகார வரம்பு

இல்லை என்றும் வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும் பொய்யான சங்கதியுடன் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கை நிராகரிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் மனுதாரரின் கூற்றை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் எல்லாம் தவறானவை என்றும் தாவா சொத்தானது சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து எதிர்மனுதாரரின் குடும்பத்தினர் சுவாதினர் அனுபவத்தில் இருந்து வந்ததாகவும், தாவா சொத்து சம்மந்தமாக 12.07.1916 தேதியிட்ட ஆவண எண். 2065/1916 ன்படி கொடுமுடி சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின்படி எதிர்மனுதாரரின் முன்னோர்களான சுப்பண கவுண்டர், குமாரசாமி கவுண்டர்மகன்கள் மற்றும் அவரது இதர சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு ஏற்பட்ட பாகப்பிரிவினை மூலம் எதிர்மனுதாரரின் முன்னோர்களான முத்துசாமி கவுண்டரின் மகன்களான சுப்பண கவுண்டர் மற்றும் சின்னப்ப கவுண்டர ஆகிய இருவர்களுக்கும் சி செட்யூல்படி பாத்தியப்பட்டு அவரது சுவாதீனத்தில் இருந்து வந்ததாகவும் 1950 ம் வருடம் சுப்பண கவுண்டர் மற்றம் அவரது மகன் மாணிக்கசுந்தரம் ஆகியோர்களுக்கு இடையில் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் தாவா சொத்தானது வி.எஸ். மாணிக்கசுந்தரத்திற்கு பாத்தியப்பட்ட அந்த ஆவணமானது ஈரோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1893/1950 என்ற எண்ணில் 01.11.1950 ல் பதிவு செய்யப்பட்டது.

7. மாணிக்க சுந்தரத்திற்கு பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்ட சொத்தை அவரது மைனர் மகன்கள் சின்னப்பன் செந்தில்குமார், சுப்பிரமணியன் மற்றும் முத்துகுமார் ஆகியோர்களுடன் பாகப்பிரிவினை செய்து கொண்டு அதை ஈரோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் 15.02.1960 தேதியில் ஆவண எண். 444/1960 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், பின்னிட்டு மாணிக்கசுந்தரம் அவரது மகனான செந்தில்குமார் மற்றும் 3 சகோதரர்கள் ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண். 307/1971 என்ற வழக்கை பாகப்பிபிரிவினை கோரி தாக்கல்

செய்து அதில் சமரச தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டு தாவா சொத்தானது செந்தில்குமார் மற்றும் அவரது 3 சகோதரர்களுக்கு ஒதுக்கப்பட்டதாகவும், மேற்படி அசல் வழக்கில் பிறப்பித்த தீர்ப்பின்படி சொத்துக்களை அனுபவித்து வந்து 11.12.1980 தேதியில் 1ம் எதிர்மனுதாரரும் அவரது சகோதரர்களும் பாகப்பிரிவினை ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு தாவா சொத்தானது எதிர்மனுதாரருககும், அவரது மகன்களான 2, 3 எதிர்மனுதார்களுக்கு பாத்தியப்பட்டது.

8. மேற்படி பாகப்பிரிவினை ஒப்பந்தம் பதிவு செய்யப்படவில்லை என்றும் அதன்பேரில் ஏற்பட்ட ஈரோடு சார்பு நீதிமன்ற அ.வ.எண். 20/1997 படி வழக்கு தொடரப்பட்டு அதன் மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண். 562/2003ல் ஏற்பட்ட சமரச உடன்படிக்கையின்படி எதிர்மனுதாரர்களுக்கு உரிமையானது என்றும் மைனர் இனாம் ஒழிப்பு நடவடிக்கையின்போது மாணிக்கசுந்தரம் கோபிசெட்டிபாளையம் செட்டில்மெண்ட் தாசில்தார் முன்னிலையில் ஆஜரானபோதிலும் இனாம் நிலம் வாங்கிய கிரையப்பத்திரம் இல்லாததால் ரயத்துவாரி பட்டா அவருக்கு வழங்கப்படவில்லை என்றும் செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட சி.எம்.ஏ.2/2012 ஈரோடு சார்பு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், மைனர் இனாம் ஒழிப்பு மற்றும் ரத்துவாரியாக மாற்றும் சட்டமானது இனாம் நிலங்களை ஒழித்து ரயத்துவாரியாக மாற்றி நிலங்களை உழுபவர்களுக்கு அந்த நிலங்களை உடமையாக்குவதற்காக கொண்டு வரப்பட்ட சட்டம் என்றும் மைனர் இனாம் சட்டம் அமுலுக்கு வந்த தேதிக்கு முன்னர் 60 ஆண்டுகளுக்குள் குறிப்பிட்ட இனாம் நிலம் விற்பனை மூலம் மாற்றப்பட்டு இருந்தால் அந்த நிலத்தை பெற்றவர்களுக்கு பட்டா வழங்கப்பட வேண்டும் என்றும் அதேபோல் சட்டப்பிரிவு 8(2)(1)(பி)ன்படி சட்டம் அமுலுக்கு வந்த தேதிக்கு முன்னர் 12 ஆண்டுகளுக்குள் விற்பனை மூலம் இனாம் நில உரிமை மாற்றப்பட்டு

இருந்தால் அந்த நிலத்திற்கான இழப்பீட்டு தொகை 20 ஆண்டு தவணையில் அரசுக்கு செலுத்தவேண்டும் என்ற நிபந்தணைக்கு உட்பட்டு பட்டா வழங்கப்பட வேண்டும் என்றும் மேற்கண்ட இரண்டு நிபந்தணைகளும் இல்லாத இருக்கும் பட்சத்தல்தான் இனாம் நிலம் இனாம்தாரருககு பட்டா வழங்கப்பட வேண்டும் என்றும் சட்டப்பிரிவு 8 ன்படி தாவாவில் விளக்கி குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், தாவா சொத்தானது 1963 க்கு முன்பாக சுமார் 100 ஆண்டு காலமாக எதிர்மனுதாரரின் குடும்பத்தினர் சுவாதீன அனுபவத்தில் இருப்பதால் நீடு அனுபோக உரிமையாளது எதிர்மனுதாரருக்கு உண்டு என்றும் முன் வழக்கு அ.வ.எண். 145/2006 எதிர்மனுதாரர் கவனக்குறைவினால் தள்ளுபடி செய்யப்பட்டதாலும் தாவா சொத்தில் எதிர்மனுதாரருககு உரிமை இருப்பதால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

9. எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கை தாவா சொத்தானது வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று உரிமை விளம்புகை செய்ய வேண்டும் என்றும் அதன் தொடர் பரிகாரமாக பிரதிவாதிகள் வாதிகளின் சுவாதீன அனுபவத்திற்கு இடையூறு செய்யாதிருககும் பொருட்டும் நிரந்தர தடை உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா சொத்தை பொறுத்து மனுதாரர் தரப்பில் கோபிசெட்டிபாளையம் செட்டில்மெண்ட் தாசில்தார் அவர்களால் வழங்கப்பட்ட ரயத்துவாரி பட்டா மூலமாக உரிமை கோரும் அதே சூழ்நிலையில் எதிர்மனுதாரர்களுக்கு 1963 க்கு முன்பாக 100 ஆண்டுகளுக்கு மேல் தாவா சொத்தானது எதிரமனுதாரரின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டு சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்ததாக தெரிவித்து தாவா சொத்தின் உரிமையை விளம்புகை செய்யக்கோரி பரிகாரம் கோரப்பட்டுள்ளதால் முதலில் தாவா சொத்தின் உரிமை மூலமானது ரயத்துவாரி பட்டாப்படி 1ம் மனுதாரர் கோவிலுக்கு பாத்தியப்பட்டதா அல்லது அனுபவத்தின்படி எதிர்மனுதாரரின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டதா என்பதை தீர்மானிக்க வேண்டி உள்ளது.

10. மேலும் தாவா சொத்துக்கள் சம்மந்தமாக பல்வேறு நீதிமன்றங்களில் முன் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அதில் குறிப்பாக அ.வ.எண். 20/1997 என்ற வழக்கை ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அதன்பேரில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழககு எண். 562/2003ல் ஏற்பட்ட சமரச உடன்படிக்கையின்படி தாவா சொத்தானது ஏ செட்யூல் வரிசை எண் 6ல் குறிப்பிட்டபடி எதிர்மனுதாரர்களுக்கு உரிமையாக்கப்பட்டுள்ளதால் தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட சங்கதிகளை பொறுத்தும் தாவா சொத்தின் உரிமை மூலத்தை பொறுத்தும் விரிவான வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம் தான் விசாரணை செய்து முடிவு மேற்கொள்ள முடியும் என்பதால் தாவாவானது முன் தடை தீர்ப்பால் பாதிக்கப்பட்டதாகவோ அல்லது எதிர்மனுதாரர்கள் மறுசுழற்சி வழக்கு நடவடிக்கைக்கு நீதிமன்றத்தை நாடியுள்ளதாகவோ அனுமானம் கொள்ள முடியாது என்றும் சொத்தின் பேரிலான உரிமை மூல பிரச்சனை எழுந்துள்ளதால் அதை முழுமையான விசாரணை மேற்கொண்டால்தான் தெளிவான மற்றும் இறுதியான ஒரு முடிவை எட்ட முடியும் என்பதால் இம்மனுவானது அனுமதிக்க போதுமான முகாந்திரம் இல்லை என முடிவு செய்யப்படுகிறது.

மனுவை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலிவடிவில் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2024ம் வருடம் ஜனவரி மாதம் 3ம்நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

M RAMACHANDRAN

Digitally signed by M RAMACHANDRAN
Date: 2025.01.03 16:57:58 +0530

சார்பு நீதிபதி,
கொடுமுடி.

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>

(இருதரப்பிலும் .. தாக்கல் இல்லை.. )

M RAMACHANDRAN

Digitally signed by M RAMACHANDRAN
Date: 2025.01.03 16:57:41 +0530

சார்பு நீதிபதி,
கொடுமுடி.